# கன்று பராமரிப்பு

நல்ல தரமான கன்றுகளை பெற நல்ல தீவனமம் முறையான கவனிப்பும் அவசியம். கன்றுகள் பிறப்பதற்கு முன்பிருந்தே நன்கு மாட்டை கவனித்தல் வேண்டும். இல்லையெனில் கவனிப்பற்ற மாடுகள் ஈனும் கன்று மெலிந்து பலவீனமானதாக இருக்கும். எனவே கன்று ஈனுவதற்கு 6-8 வாரங்கள் முன்பிருந்தே சினைமாட்டிற்கு சிறந்த கவனிப்பு அவசியம்

**பிறந்த கன்றின் கவனிப்பு**

- கன்று பிறந்த உடனே அதன் வாயிலும், மூக்கிலும் போர்த்தியுள்ள கண்ணாடி போன்ற ஆடையை சுத்தம் செய்ய வேண்டும்
- தாய் மாடானது அதன் நாக்கினால் கன்றின் உடல்முழுவதும் சுத்தம் செய்யும். அவ்வாறு செய்யாவிடில் அல்லது குளிர் காலத்தில் ஈரமற்ற துணி (அ) சணல் பை கொண்டு கன்றினை சுத்தம் செய்து கன்றிற்கு சீரான சுவாசம் கிடைக்கச் செய்ய வேண்டும்
- அதன் வயிற்றிலும், நெஞ்சிலும் சிறிது கையினால் அழுத்திவிட்டால் கன்று எளிதாக சுவாசிக்க இயலும்
- தொப்புள் கொடியை வயிற்றிலிருந்து 2லிருந்து 5 செ.மீ. நீளம் விட்டு அறுத்துவிட்டு அயோடின் அல்லது டிஞ்சர் தடவி முடிந்துவிட வேண்டும்
- குட்டி தானாக எழுந்து சென்று தாய்ப்பால் அருந்த முடியவில்லை எனில் அதை தூக்கிவிட்டு உதவி செய்யலாம்
- கன்று பிறந்தவுடன் மாட்டிலிருந்து வரும் முதல் பாலை (72 மணி நேரத்திற்குள்) சீம்பால் என்பர். இதில் விட்டமின் “ஏ” மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகமாக இருக்கும். பிறந்த 10 முதல் 12 மணி நேரம் வரை கன்றுகளின் சிறுகுடல் சவ்வுகள் நோய் எதிர்ப்புச் சக்திப் பொருட்களை உட்கிரகிப்பதற்கு வசதியாக அமைந்திருக்கும். இச்சமயத்தில் சீம்பாலை உட்கொள்ளச் செய்தல் சிறந்தது. 30லிருந்து 45 நிமிடங்களுக்குள் எழுந்து சென்று தாய்ப்பால் குடிக்கச் செய்ய வேண்டும். ஆறு மணி நேரத்திற்குள் சீம்பாலை குடிக்கச் செய்ய வேண்டும்
- பிறந்த கன்றின் எடையை அளவிட வேண்டும்
- மாட்டின் காம்பினை நன்கு நீரினால் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்
- கொட்டிலில் உள்ள திரவங்களை அகற்றி சுத்தப்படுத்த வேண்டும்
- கன்றிற்குத் தேவையான படுக்கை வசதி அமைத்துத் தர வேண்டும். குளிர்காலமாக இருந்தால் அதை குளிரிலிருந்து பாதுகாக்க வேண்டும்.
- பிறந்த முதல் மூன்று நாட்களுக்கு கன்றிற்குத் தவறாமல் சீம்பால் தரவேண்டும். ஒரு நாளைக்கு 2 வேளை கொடுக்கலாம். கன்று பலவீனமாக இருந்தால் 3 முறை குடிக்கச் செய்யலாம். இது கன்றின் உடல் வெப்பத்தை உயர்த்தி வெதுவெதுப்படையச் செய்கிறது. ஒரு மாதம் கழித்து கன்றுக்கு நல்ல தரமுள்ள பசுந்தீவனமும் 4 மாதத்திற்குப் பிறகு உலர்தீவனம் அளிக்கலாம்.

- நாளொன்றிற்கு 1/10 பங்கு கன்றின் எடைக்கு கணக்கிட்டு முதல் 3 நாட்கள் கண்டிப்பாக சீம்பால் அளிக்கப்பட வேண்டும். இது கன்றின் செரிக்கும் தன்மையையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகப்படுத்துகிறது. சீம்பாலில் புரதச்சத்து மிகவும் அதிகம். இதன் புரத்தில் உள்ள குளோபுலின் கால்நடைகளைத் தாக்கும் நோய் கிருமிகளை எதிர்த்துத் தாக்கும் சக்தி கொண்டது. சீம்பாலில் புரதம் 3 மடங்கும், காப்பர், இருப்புச்சத்து, மெக்னீசியம் மற்றும் மாங்கனீஸ் ஆகியவையும் உள்ளன. சாதாரணமாக பசும்பாலை விட 5-15 மடங்கு அதிக விட்டமின் "ஏ" சீம்பாலில் உள்ளது. இதுதவிர ரிபோ.ஃ.பிளோவின், குளோரின், தையமின் மற்றும் பேன்டோதொனிக் அமிலம் ஆகியவையும் அதிகம் உள்ளன.

### பசும்பால் ஊட்டம்

முடிந்த அளவு தாய்ப்பசுவின் பாலை ஊட்டச் செய்யவும். பால் கறந்த உடனே கன்றை ஊட்டவிட வேண்டும். முதல் ஒரு வாரத்திற்கு நாளொன்றுக்கு 3-4 முறையும் அதன் பின்பு 2 முறையும் பாலூட்டுவதைப் பழக்கப்படுத்தலாம்.

### அடர் தீவனம்

இதில் கம்பு, சோளம், கேழ்வரகு, உடைத்த கோதுமை, அரிசி போன்ற தானியங்களை அரைத்து கலந்து பயன்படுத்தப்படுகிறது. சில வாரங்களுக்குப் பிறகு தாய்ப்பால் ஊட்டத்தை நிறுத்திவிட வேண்டும். அடர்தீவனத்தை பால் ஊட்டிய பின்பு கன்றின் வாயில் தேய்க்க வேண்டும். பின்பு கன்று அதை சாப்பிட்டு பழகிவிடும். கன்று தானியங்களின் விகிதத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

### கலப்புத் தீவனம்

அடர்தீவனத்தில் கலந்துள்ள தானியங்களுடன் மேலும் பிண்ணாக்கு வகைகள், தவிடு வகைகள், பருப்பு, நெய், வெல்லப்பாகு, உப்பு, தாது உப்புக்கலவை ஆகியவற்றை தேவையான விகிதத்தில் சரியாகக் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பாலூட்டத்தை நிறுத்தும் முன்பே இத்தீவனத்தை ஊட்டச் செய்ய வேண்டும். பாலூட்டம் இருக்கும்போது அதிக புரதம் உள்ள தானியங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் ஏற்கனவே பாலில் புரதம் அதிகம் உள்ளது.

### பிற பராமரிப்புகள்

கன்றுகளை அடையாளம் காண நிரந்தர அல்லது தற்காலிக அடையாகள் குறிகளைப் பயன்படுத்தலாம். காதின் அடிப்பகுதியில் எண்களையும், எழுத்துக்களையும் பச்சை குத்தியும், உலோக காதணிகளை அணிவித்தும் செயல் படுத்தலாம். கழுத்தில் அடையாளக் குறித்தகடுகளைத் தொங்கவிடலாம். பிறந்து 7

முதல் 10 நாட்களுக்குள் கொம்புக் கருத்தை நீக்கி கொம்பு வளர்வதைத் தடுக்கலாம். இதை காய்ச்சிய இரும்பு அல்லது காஸ்டிக் குச்சிகள் மற்றும் மின்சார முறையிலும் செய்யலாம். நீக்கிய உடன் கொம்பின் மேல் வாசலில் களிம்பு, வேப்பெண்ணெய் போன்றவற்றைத் தடவ வேண்டும். கன்றுகளுக்கு முறையாக குடற்புழு நீக்க மருந்தை அளிக்க வேண்டும். அவைகளுக்கு மாதம் ஒரு முறை அளித்தல் நல்லது. பிறந்த இரண்டாவது வாரத்திலிருந்து தூய தண்ணீரை குடிப்பதற்கு அளிக்கலாம். கன்றுகளை மூன்று மாதங்கள் வரை தனித்தனித் கொட்டிலில் பராமரிக்க வேண்டும். 3லிருந்து 6 மாதம் வரை குழுவாக வளர்க்கலாம். 6 மாதங்களுக்குப் பிறகு காளைக்கன்றுகள் மற்றும் கிடாரிகளைத் தனித்தனியாக பரித்து வளர்க்க வேண்டும். கன்றுகளின் முதல் மாதத்தில் வயிற்றுபோக்கு, குடற்புழு மற்றும் காய்ச்சல் போன்றவற்றால் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும். எனவே அதனை நல்ல வெதுவெதுப்பான சுகாதாரமான இடத்தில் வளர்த்தல் இழப்பைக் குறைக்கும். கிடாரிக் கன்றில் நான்கிற்கு மேற்பட்ட காம்புகள் இருப்பின் அதை பிறந்த முதல் இரு மாதங்களுக்கு நீக்கி விடுதல் வேண்டும். காளைக் கன்றுகள் 8 அல்லது 9 மாதத்தில் ஆண்மை நீக்கம் செய்யப்பட வேண்டும்.